# திருவள்ளுவருக்குக் கடிதம்

**கி.வானதி**
**க.எண் 12 A  கிம் மோ சாலை**
**#03 - - 48**
**சிங்கப்பூர் 1027.**

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்து நிலமிசை நீடுவாழ்கின்ற முதற்பாவலர், குணம் என்னும் குன்றேறி நின்ற திருவள்ளுவர் பெருந்தகை அவர்களுக்கு, கி.வானதி வரையும் மடல். வணக்கம். தோன்றிய பொழுதே புகழொடு தோன்றி, உலக வாழ் மக்களுக்கு, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறட்பாக்களில் வழங்கிய அருந்தவப் பெரியீர்! நான் எழுதுகின்ற இக்கடிதம் தங்களுக்குப் பெரும் வியப்பை அளிக்கலாம். ஆயினும், தாங்கள் இப்பூலகை விட்டு மறைந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இன்னும் தங்களை நினைவுகூர்ந்து, சிங்கை என்னும் சிறிய தீவிலிருந்து சிறுமி ஒருத்தி கடிதம் எழுதியிருக்கிறாளே என்பது தங்களுக்கு மகிழ்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தும் என்று எண்ணுகிறேன்.

‘‘ஒன்றே செய்தல் வேண்டும்; நன்றே செய்தல் வேண்டும்; நன்றும் இன்றே செய்தல் வேண்டும்’’, என்னும் பெரும் நோக்கில் தாங்கள் இயற்றிய திருக்குறளை நான் எவ்வாறு போற்றிப் பயில்கிறேன் என்பதைக் கூறவே நான் இக்கவிதையை வரைகின்றேன்.

நான் வாழ்கின்ற இக்காலத்தில், தாங்கள் இயற்றிய திருக்குறளைப் பல அறிஞர்கள் போற்றுகின்றனர். ஏன் இவ்வளவு கூற வேண்டும்? தங்கள் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களான ஔவை மூதாட்டி முதல் மதுரைத் தமிழ் நாகனார் வரை பல்வேறு புலவர் பெருமக்கள் தாங்கள் இயற்றிய தெய்வநூலை எவ்வாறு போற்றிப் பெருமைப்படுத்தினர் என்பதை இவ்வுலகு அறியும்.

‘‘கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்’’, என்று இடைக்காடர் திருக்குறளின் புகழை மேலோங்கச் செய்தார். ஆனால், ஔவை மூதாட்டியோ மேலும் நுண்ணிய முறையில் கூறுவது போல், ‘‘அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள், என்று திருக்குறளுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

‘‘சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால்’’. என அரிசில் கிழாரும், ‘‘முப்பாலின் மிக்க மொழியுண்டெனப் பகர்வார் எப்பாவலரினுமில’’ என முகையலூர்ச் சிறுகருந்தும்பியாரும், ‘‘உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உள்ள முருகுமே வள்ளுவர் வாய்மொழி மாண்பு’’, என மாங்குடி மருதனாரும் தங்கள் அருங்குறட் பாக்களுக்குப் புகழாரம் சூட்டினார்.

எந்த ஒரு சமயத்தாருக்கோ, மொழியாருக்கோ, குலத்தாருக்கோ சொந்தமாக இல்லாமல், எல்லாருக்கும் பொதுவாக அமைந்திருக்கும் திருக்குறளில் சொல்லப்படாதது ஒன்றுமில்லை என்பதைத் திருக்குறளைப் படிக்குந்தோறும், படிக்குந்தோறும் உணர்கிறேன். இதனையே, ''எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை'', என்று உறுதிப்படுத்துகிறார் மதுரைத் தமிழ் நாகனார்.

தங்கள் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு மட்டுமின்றிப் பிற்காலத்தில் வாழும் மக்களுக்கும் பொருந்தும் வகையில், தெள்ளிய கருத்துக்களை உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் ஒன்றே முக்கால் அடியில் தெள்ளுத்தமிழ் குறட்பாக்களில் தாங்கள் சித்தரித்துச் சென்றீர்கள். அறத்தை வலிறுத்துகையில், ''மனத்துக்கண் மாசிலன் ஆதலே அறம்'', என்றும், பேறுகளில் பெரும் பேறு, ''நன்மக்களைப் பெறுதலே'', என்றும் கூறினீர்கள். மேலும், ''இன்சொலன் ஆதலே அறம்'' எனவும், ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரை விட ஓம்பப்படல் வேண்டும்'' எனவும் தாங்கள் குறட்பாக்களில் கூறியிருப்பது நினைவுக்கு வருகிறது. இவற்றை எல்லாம் நான் ஆழ்ந்து கற்கின்றபோது, தாங்கள் வாழ்ந்த உலகம் எவ்வளவு சிறந்த உலகம் என்றும், தங்கள் காலத்தில் வாழ்ந்த மக்கள் எத்துணைப் பெரும்பேறு செய்திருத்தல் வேண்டும் என்றும் உணர்கிறேன். ''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'', என்ற கூற்றுத் தங்கள் காலத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பொருந்தும், அக்காலத்து மக்கள் அகவாழ்விலும் புறவாழ்விலும் சிறந்து விளங்கினார்கள். ஆனால், நான் வாழ்கின்ற உலகமோ முற்றும் மாறுபட்ட உலகம் என்று கூறினால் நீங்கள் வியப்படைவீர்கள்.

எவையெல்லாம் அறமல்ல என்று தாங்கள் கூறினீர்களோ, எவற்றையெல்லாம் செய்தல் கூடாது என்றீர்களோ, அவற்றையெல்லாம் ''பகுத்தறிவு படைத்த மனிதன்'' இன்று செய்து வருகிறான்! பயனில சொல்வாரும், தீவினை செய்வாரும், வாய்மை சொல்லாதாரும், பெரியாரைப் பேணாதாரும், கண்ணோட்டம் இல்லாதவரும், ஒன்றெயதி நூறு'' இழுக்கும் சூதர்களும் மலிந்த உலகாக மாறிவிட்டது நான் வாழ்கின்ற உலகம். மண்ணாசையால் ஒரு நாடு மற்ற நாட்டின் மீது படையெடுப்பதும் அறிவியலின் முன்னேற்றத்தால் அணுவாயுதங்களின் துணைகொண்டு இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவிப்பதும், இன்று இயல்பான நிகழ்ச்சிகளாகிவிட்டன. மக்களின் மனத்திலிருந்த அறம் குன்றிவிட்டது; மறம் ஓங்கி நிற்கிறது. பகை பாராட்டும் மனிதர்களால் நாள்தோறும் பல்லாயிரம் மக்கள் இறக்கின்றனர்.

இவ்வாறு மனிதர்களால் ஏற்படும் செயற்கைப் பேரிடர்களால் மட்டுமின்றி வெள்ளம், பஞ்சம் போன்ற இயற்கைப் பேரிடர்களாலும் மக்கள் நாள்தோறும் பசியாலும், பட்டினியாலும் வாடி மடிகின்றனர். இதையே ஒளவைத் தமிழ் மூதாட்டி ''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்றார். ஆனால் தாங்களோ,

**"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது''**

என்று கூறி, வறுமையைப் போன்ற கொடியது வறுமை ஒன்றே என்று வலியுறுத்தியிருக்கிறீர்கள். இத்தகைய வறுமையினால் வளர்ச்சி குன்றிய பல நாடுகளில்

பலகோடி மக்கள் இரந்து உயிர் வாழும் நிலைமைக்கு வந்துவிட்டனர். ‘‘உலக மக்களுக்கு இரந்து உயிர் வாழும் நிலை ஏற்பட்டால், இந்த உலகைப் படைத்தவனே அலைந்து கெடுவானாக’’. என்று தாங்கள் ஒரு குறட்பாவில் கூறியிருப்பது என் நினைவுக்கு வருகிறது.

ஆகையால், இதுவரை நான் கூறியவற்றிலிருந்து உலகம் ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் எதிர்மறைப் போக்கிலேயே போய்க்கொண்டிருப்பதைத் தாங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள்.

மக்கட் குலம் செந்நெறியில் வாழ்வதற்கு உகந்த வகையில் தாங்கள் இயற்றிய திருக்குறளை உலக மாந்தர் அனைவரும் கற்று அதன்படி ஒழுகினால், இவ்வுலகம் பிறர் நலம் பேணும் வெற்றி மிக்க உலகாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய உலகம் என்றைக்குத்தான் உருவாகும் என்று நான் எண்ணிக்கொண்டு இருக்கிறேன். தங்களுக்குக் கூற வேண்டியவை இன்னும் நிறைய உள. அவற்றைப் பிறிதொரு கடிதத்தில் விரிவாக எழுதுகிறேன். நன்றி.

தங்கள் அன்புள்ள

**கி.வானதி**
**புகுமுக வகுப்பு 3 (1985)**
**அங் மோ கியோ உயர்நிலைப் பள்ளி**